<table>
<tr><td colspan="2">அசல் வழக்கு எண்.35/2018</td><td>பி. சா .1</td><td colspan="2">தேதி.02.03.2023</td></tr>
<tr><td>பெயர்</td><td colspan="2">திரு.சொலையே கவுடர்</td><td>வயது</td><td></td></tr>
<tr><td>த/பெ.</td><td colspan="2">திரு. திம்மைய்ய கவுடர்</td><td>முகவரி</td><td>4/4 கே. கல்லூர்,<br>வெள்ளியங்காடு கிராமம்</td></tr>
<tr><td>வட்டம்</td><td colspan="2">மேட்டுப்பாளையம்</td><td>மாவட்டம்</td><td>கோயமுத்தூர்</td></tr>
</table>

சாட்சி முன்னிலை உறுதிமொழி எடுக்கப்பட்டது

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. வா.சா.ஆ.1 ல் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதானே என்றால் இல்லை. வா.சா.ஆ.5 ஆவணத்தில் 1ம் இலக்கமிட்டவர் என்ற இடத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது கிடையாது. வா.சா.ஆ.3 அஞ்சல் ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. எனக்கு கையெழுத்து போட தெரியும். வக்காலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை.( 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட வக்காலத்தில் உள்ள கையொப்பம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு கேள்வி எழுப்பப்பட்டது.) பதிலுரையில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் என்னுடையது போலதான் இருக்கிறது. சாட்சிய உறுதிமொழி வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து உங்களுடையதா என்றால் அது என்னுடையதல்ல.( பி.சா.ஆ.1 ன் சாட்சிய உறுதிமொழி வாக்குமூலம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு கேள்வி எழுப்பப்பட்டபோது சாட்சி மேற்கண்டவாறு பதிலளித்தார். ) இன்று என் மகன் தான் என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார் என்றால் சரிதான். எனக்கும், என் மகனுக்கும் , என் குடும்பத்தாருக்கும் எந்த கருத்து வேறுபாடும் இல்லை என்றால் சரிதான். நான் சொத்தை வாங்கிய போது கிணறானது வடகிழக்கு மூலையில் தான் இருந்தது என்றால் சரிதான்.

2. நான் தாக்கல் செய்த பதில் வாதத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. (சாட்சி வாதி தரப்பு வழக்குரைஞர் கேட்கும் கேள்விகளுக்கு ஆழ்ந்து புரிந்து கொண்டு பதில் சொல்லும் முழுமையான நிலையில் இல்லாத காரணத்தால் குறுக்கு விசாரணை நிறுத்தப்படுகிறது.)

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒப்பம்/-பெ.க.சிவக்குமார்

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.